2013 மே 7]

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலே அஞ்சுபுத்தூர், தச்சூர் போன்ற பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றேன். அதேபோல, கொருக்காத்தூர் பகுதிக்கும் ஒரு துணை மின் நிலையம் அவசியம் தேவைப்படுகின்றது. எனவே, இந்த 3 பகுதிகளிலேயும் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மின்பளுவும் அதேபோன்று இருக்கின்ற மின்கட்டமைப்பு வசதிகளையும் ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே தேவை ஏற்படின் எந்தெந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் தேவைப்படுகிறதோ, அந்தந்த இடங்களிலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கோ அல்லது இருக்கின்ற துணை மின் நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கோ வேண்டிய உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 411, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

411—

வணிக வளாகம்

***1239—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 மே 7

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி நகராட்சியில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி நகராட்சியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டி முடிக்கப்பட்டு புதிய வணிக வளாகத்திலுள்ள அனைத்துக் கடைகளும் காரைக்குடி நகராட்சியால் வாடகைக்கு விடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவிடம் அரசியல் கற்கிறது அர்த்தசாஸ்திரம். வள்ளுவம் வாழ்த்துகிறது அம்மாவின் அறம். தமிழகம் முன்னேறுவது அம்மாவின் திறம். மானம் ஒன்றே பெரிதென்பது அம்மாவின் வரம். வீணர்களை வீழ்த்திடும் அம்மாவின் வீரம். ஊழல்களின் ஊற்றுக்கோலில் உலா வருகிறது டெல்லியின் கரம். அம்மாவிற்கு காத்திருக்கிறது ஷாஜஹானின் மயில்வாகனம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் முதலிலே தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காரைக்குடி இன்றைக்கு வளர்ந்து வரும் பெரிய நகரமாகத் திகழ்கிறது. மாண்புமிகு அமைச்சர் கூறியதைப்போல, பேருந்து நிலையத்தில் புதியதாக 5 சிறிய கடைகள் மட்டும் அங்கே கட்டித் திறந்து வைக்கப்பட்டு அவை இன்றைக்குப் பொதுமக்களின் பயன்பாட்டில் இருக்கின்றன. ஆனால், காரைக்குடி வளர்ந்து வரும் நகரமாகவும், கல்வி நகரமாகவும் திகழக்கூடிய நிலையில்,

2013 மே 7]

சுற்றுவட்டாரத்திலே அதிக கிராமங்களை உள்ளடக்கிய நகராட்சியாகவும் இருக்கிறது. திருச்சி, மதுரை போன்ற மாநகராட்சிகளுக்கு இணையாக மக்கள் கூடி வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு பெரிய வணிக வளாகத்தைக் கட்டித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே காரைக்குடி நகராட்சியினுடைய பொது நிதியிலிருந்து 23 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு, 11 கடைகள் கட்டப்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் 11 கடைகள் கட்டுவதற்கு அங்கே இடம் இல்லை. இடம் இல்லாத காரணத்தினால்தான் ரூ.15.8 இலட்சம் செலவில் 5 கடைகளும், சைக்கிள் நிறுத்தும் இடமும் கட்டப்பட்டிருக்கின்றன. இடவசதி இல்லாத காரணத்தினால்தான் அங்கே வணிக வளாகம் கட்டப்பட முடியவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 11 கடைகள் கட்டலாம் என்று 2011 ஆம் ஆண்டு அரசுக்கு ஓர் அறிக்கை அனுப்பப்பெற்று, பேருந்து நிலையத்திற்குள்ளேயே 5 கடைகளை மட்டும் கட்டியிருக்கிறார்கள். காரைக்குடி நகரில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் நிறைய உள்ளன. ஆகவே காரைக்குடி நகராட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் எத்தனை கோடி ரூபாயை ஒதுக்கினாலும் நானே முன் நின்று இடத்தைத் தேர்வு செய்து தருகிறேன்.*

ஆகவே வளர்ந்துவரும் நகராட்சியில் ஒன்றாக இருக்கும் காரைக்குடி நகராட்சிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவிடத்திலே எங்களுடைய கோரிக்கைகளைச் சொல்லி எங்களுக்கு நிறைவேற்றித் தரவேண்டும். இடம் நிறைய இருக்கின்றது. அதை நானே முன் நின்று தேர்வு செய்வேன் என்று மாண்புமிகு அமைச்சரிடத்தில் தங்கள் வாயிலாக தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, பேருந்து நிலையத்தில் கடை கட்டப்படுமா என்பதுதான். அதற்குத்தான் பொது நிதியிலிருந்து 23 இலட்ச ரூபாய் ஒதுக்கி பேருந்து நிலையத்தில் போதிய இடமில்லாத காரணத்தினால் 5 கடைகளை மட்டும் கட்டியுள்ளார்கள். மீதித் தொகை நகராட்சியிடமே உள்ளது. காரைக்குடி நகராட்சி ஒரு வளமான நகராட்சி என்று கருதுகிறேன். காரணம், கடைகள் கட்டுவது என்று சொன்னாலே நகராட்சியில் தீர்மானம் போடுவார்கள். கடன் பெற்றுதான் கடைகளைக் கட்டுவார்கள். ஆனால், இந்த நகராட்சியைப் பொறுத்தவரையில் நகராட்சியினுடைய பொது நிதியிலிருந்துதான் கடைகளைக் கட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நகராட்சிக்குட்பட்ட முக்கியமான இடங்களில், நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கின்றபட்சத்தில் அங்கே வணிக வளாகம் கட்டினால் வருவாய் வரக்கூடிய அளவிலேயும் இருக்கும் என்ற பட்சத்தில் நகராட்சியில் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்புவார்கள் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

2013 மே 7]

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் சுமார் 50–க்கும் மேற்பட்ட காய்கறிக் கடைகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டடம் மிகவும் பழைமை வாய்ந்ததாக இருக்கிறது. காய்கறி வியாபாரம் செய்யக்கூடியவர்கள் அந்த நுழைவாயிலில் கழிவுகளையெல்லாம் கொட்டுவதால், மழைக்காலங்களில் அதிக அளவில் துர்நாற்றம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பழைய பேருந்து நிலையத்தில் ஒரு புதிய காய்கறி வணிக வளாகம் கட்டிக் கொடுக்கவேண்டும். புதிய பேருந்து நிலையத்தில் நகராட்சிக்குச் சொந்தமாக நிறைய இடங்கள் இருக்கின்றன. அங்கே தனியார் ஆக்கிரமித்துள்ளார்கள். அவற்றை அகற்றிவிட்டு, புதிய பேருந்து நிலையத்தில் வணிக வளாகமும், பழைய பேருந்து நிலையத்தில் காய்கறி வணிக வளாகமும் கட்டிக் கொடுப்பதன் மூலம் நகராட்சிக்கு நல்ல வருமானமும் வரும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நல்ல கோரிக்கை. பழைய பேருந்து நிலையத்தில் காய்கறிக்கடை வளாகம் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். அங்கே காய்கறிக் கழிவுகளை கொட்டுவதன் காரணமாக அசுத்தம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதைத் தடுப்பதற்கும், புதிய வளாகம் கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இது ஒன்று. இன்னொன்று, புதிய பேருந்து நிலையத்தில் நிறைய இடங்கள் தனியாரிடத்தில் இருக்கிறதென்று கூறியிருக்கிறார். அதற்கு நகராட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும். நகராட்சி நடவடிக்கை எடுக்கின்றபோது அங்கே இருக்கின்ற முக்கியப் பிரமுகர்கள் தலையிடாமலும் இருக்கவேண்டும். அப்படி தலையிடாமல் இருக்கின்றபட்சத்தில் நகராட்சி அந்த இடத்தை கையகப்படுத்துகின்ற நேரத்தில் அங்கே தேவையான இடங்களில் வருவாய் வரக்கூடிய அளவிலே கடைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.*

திரு. எம்.கே. செல்வராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த விவசாயிகளின் விடிவெள்ளி, இந்திய அரசியலின் ஈடு இணையில்லா தலைவர், நிறைந்த புகழால் உயர்ந்து நிற்கும் உன்னதத் தலைவி, வீர வரலாற்றில் விளைந்த வீரமங்கை, இந்தியத் திருநாட்டின் இறையாண்மையைக் காத்திடும் இணையில்லா தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) நித்தம் வரும் தடைகளை உடைத்திடும் இமயமே, உழைப்பு என்ற பெயரில் உதிரத்தை துளித் துளியாய் கொடுத்து மக்களைப்பற்றியே மணிப்பொழுதும் எண்ணுகின்ற மக்கள் தலைவி, மாசற்ற மாணிக்கம், (மேசையைத் தட்டும் ஒலி) அஞ்சாத மன உறுதி, விடா முயற்சி, காலம் தாழ்த்தாத முடிவு, வாரி வழங்கும் வள்ளல் குணம், ஆழ்ந்த அறிவாற்றல் ஆகிய குணங்களையும் ஒருங்கே பெற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

சேலம் மாநகர் பழைய பேருந்து நிலையம் அருகில், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி அலுவலகத்திற்கு மிக அருகில், சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான 10,000 சதுர அடி நிலம் தற்போது டெண்டர் விடப்பட்டு இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடமாக செயல்பட்டு வருகிறது. அது விலைமதிப்பில்லாத ஓர் இடம். அந்த இடத்தில் மாநகராட்சி சார்பில் மேலும் ஒரு வணிக வளாகம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

2013 மே 7]

கூறிய அந்த இடம் சேலத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. அங்கே சுற்றுப்புறப் பகுதிகளுக்கு சென்று வருகின்றவர்களுக்கு இரு சக்கர வாகனம் நிறுத்துவதற்காக அந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாநகராட்சி சார்பாக அவ்விடத்தில் வணிக வளாகம் கட்டுகிறோம் என்று தீர்மானம் போட்டு, அதை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பவேண்டும். அது பெரிய அளவில் வருமானம் வரக்கூடிய ஓர் இடம்தான். நகரின் மையப் பகுதியில் 10,000 சதுர அடி உள்ள இடம். பல கோடி ரூபாய் மதிப்புள்ள இடம். அந்த இடத்தை மாநகராட்சியின் நிரந்தர சொத்தாகவும் உருவாக்கலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநகராட்சிமூலம் தீர்மானத்தினை நிறைவேற்றி அங்கே எந்த மாதிரியான வணிக வளாகம் கட்டலாம் என்று மதிப்பீடு போட்டு அனுப்பினார் என்றால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 412, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

412—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

*****7116**—**திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் தொகுதியில் மாம்பழக் கூழ் தொழில் நிறுவனம் தொடங்குவது குறித்த கருத்துரு அரசின்